முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நமிநந்தியடிகள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.12.2018, செவ்வாய்க்கிழமை

1. **அருட்குருவே ஆனந்த ஞானகுருவே**
   **அகிலம் வியக்க அற்புதம் படைக்க**
   **அருட்சுடரெனும் சரவண சோதி ஏற்றி**
   **ஆறுமுக அரங்கமகா குருவாக வந்த**
2. வந்தநல் ஞானியே வள்ளலே
   வல்லமைபட உன் பெருமை கூறி
   சிந்தைபட **விளம்பி சிலை திங்கள்**
   **செப்பிட தசதிகதி குசன் வாரம்**
   **(விளம்பி வருடம் மார்கழி மாதம் 10ம் நாள் 25.12.2018, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் ஒளி சூட்சும நூலை**
   **வழங்கிடுவேன் நமிநந்தியடிகளும்**
   சோரமில்லா நல்உலகம் அமைய
   செப்பிடுவேன் அரங்க ஞானி வழிகள் குறித்து
4. வழிகாட்டிடும் சுத்த ஞானநெறியாம்
   வல்லமையான தரும நெறியை
   வழி மொழிந்து ஏற்கும் தேசமே
   வல்லமையும் பாதுகாப்பும் பெறும்
5. காப்புடன் இயற்கை வளமும் கூடி
   கட்டுப்பாடான சமதர்ம சமத்துவம்
   ஒப்புக் கொண்டு உலகோர் தொடர
   ஓங்காரன் விரும்பும் நல்லுலகம்
6. நல்லுலகம் ஞான உலகமாக மாறும்
   ஞானிகளை உருவாக்கும் நோக்கிலே
   இல்லாமை போக்கி காத்து
   ஏழ்மை பசிபிணி விரட்டும் தருமம்
7. தருமம் வளர்த்து தயவு பலம்
   தன்னை சரணடைபவர்களுக்கு
   பெருமைபட விதைத்து வளர்த்து
   பொருளாசை விட்டு தன்னார்வ
8. தன்னார்வ தொண்டு பெருக்கிய
   தனித்துவமிக்க பெருமக்களை
   அண்ணலும் தேர்வு செய்து வர
   அணுகி தொடருகின்ற உயர் மக்களே

9. மக்களே ஞானிகள் ஆவர்
மண்ணுலகே ஞானசக்தி பரவி
ஆக்கமான வளர்ச்சிகள் கூடி
அகிலமே சர்வபலமும் சகலவளமும் காணும்

10. காணவே அரங்கன் சொல்லும்
கனிவான கொள்கைகளெல்லாம்
ஞானமாகவும் கட்டளைகளாகவும்
நாடெங்கும் பரவி வருதல் காண

11. காணவே உலகமாற்றம் சடுதி
கலிகால இடர்கள் அகலுவது உறுதி
ஞானதேசிகன் வழிகளுக்கு வர
ஞானயுகம் அமைவது உறுதி ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நமிநந்தியடிகள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அருள்பலம்மிக்க அருட்குருவே ஆனந்த ஞான குருவே உலகமே வியக்குமாறு அற்புதங்களை படைத்திட அருட்பெருஞ்ஜோதி சுடராய் சரவண ஜோதிதனை ஏற்றி இவ்வுலகினில் முருகப்பெருமானின் அவதாரமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாக அருட்குருவாக வந்த நல்ஞானியே வள்ளலே வல்லமைமிக்க உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 10ம் நாள் 25.12.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நமிநந்தியடிகள் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நமிநந்தியடிகள்.

குற்றங்கள் இல்லாத நல்லுலகம் இவ்வுலகினில் அமைந்திட வேண்டுமாயின் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானவழிகளே சிறந்த வழிகளாகும். தூயஞான நெறியாகியதும் வல்லமை மிக்கதுமாகிய அரங்கன் கூறும் தருமநெறியினை விரும்பி ஏற்கும் நாடே இனி வருங்காலம் வல்லமையையும் பாதுகாப்பையும் பெற்றிடும்.

அரங்கன் நெறியை ஏற்றுக் கொண்ட தேசத்தில் இயற்கை வளம் பெருகிடும். கட்டுப்பாடுமிக்க சமதர்ம சமத்துவம்தனை ஒப்புக் கொண்டு உலக மக்கள் தொடர்ந்து கடைப்பிடித்திட முருகப்பெருமான் விரும்புகின்ற நல்லுலகமாக ஞானஉலகமாக இவ்வுலகம் மாற்றம் அடையும்.

உலகினில் ஞானிகளை உருவாக்குகின்ற நோக்கத்தில் உலகினில் தர்மபலம் பெருக்கிட உலகினில் உள்ள பசிப்பிணியை விரட்டும் வல்லமையும் இல்லாமையை போக்கும் உறுதியும் ஏழ்மையை போக்கி காக்கும் தருமத்தினை நாடெங்கும் வளர்த்து தயவு பலம் பெருக்கி அரங்கனை நாடி வந்து பயபக்தியுடன் அரங்கனிடத்து சரணடைகின்றவர்களுக்கு அவர் தம்முள் தயவை தர்மத்தை விதைத்து வளர்த்து வர, பொருளாசைகளை துறந்து வளர்த்து வர, பொருளாசைகளை துறந்து தன்னார்வம் மிக்க தனித்துவம் மிக்க பெருமக்களை அண்ணல் அரங்கனும் ஞானிகளாக்கும் நோக்கிலே தேர்வு செய்து வருகின்றார்.

ஆதலினால் அரங்கனை நாடி திருவடி பணிந்து தொண்டுகள் செய்தும் தர்மங்கள் செய்தும் அரங்கனைப் பின்தொடர்கின்ற உயர் மக்களே இனி வருங்காலங்களில் ஞானிகளாக ஆகிடுவார்கள்.

ஞானிகளாகும் பெருமக்கள் உலகினில் பெருக பெருக உலகம் முழுதும் ஞானசக்தி பரவிடும். உலகமெங்கும் ஆக்கப்பூர்வமான பணிகளெல்லாம் பெருகி உலகம் வளர்ச்சியடைந்து உலகமெங்கும் சர்வபலம் பெருகி சகல வளமும் பெருகி நல்லுலகமாக இவ்வுலகம் ஆகிடும்.

அப்படிப்பட்ட நல்லுலகை காண வேண்டுமாயின் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் சொல்லும் கனிவுமிக்க ஞானக்கொள்கைகளை தயவு கொள்கைகளை உலகமெங்கும் ஞானமாகவும், கட்டளைகளாகவும் பரவி உலகமக்கள் ஏற்று செயல்பட்டால் உலகப்பெருமாற்றம் விரைந்து இவ்வுலகினில் உருவாகிடும். கலியுகத்தின் துன்பங்களெல்லாம் இவ்வுலகை விட்டு உறுதியாக அகன்று ஓடும்.

**ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகானின் ஞான வழிமுறைகளுக்கு உலகோர் வந்திட்டால் ஞானயுகம் அமைவது உறுதி** என உலகறிய உரைக்கின்றார் மகான் நமிநந்தியடிகள் நாயனார்.

–சுபம்–